9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

187. தமிழ்நாட்டிற்கும் கேரளாவிற்குமிடையில் ஓடிக்கொண்டிருக்கின்ற, சிறு ரக மோட்டார் வண்டிகளின் மீது விதிக்கத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து I) 24—9—1979 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 2409-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2)-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

188. சென்னையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு திறுவனம் மூலம் விவசாயிகளுக்கு விற்கப்படும் தானியச் சேமிப்பு உலோகப் பீப்பாய்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 8—10—1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 1623-ல் அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

189. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் விவர அட்டவணை I -ல் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 31—8—1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 1374-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3)-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

190. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம், அனுமதிச் சீட்டு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 23—5—1979-ம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 1283-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3)-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*191. இராமநாதபுரம் மாவட்டம் வாகைக்குளத்தில் 4—4—1979 ஆம் தேதியன்று காவலர் நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பெற்ற இராமநாதபுரம் மாவட்ட செசன்ஸ் நீதிபதி திரு. இ. ஜெ. பெல்லி, பி.எ., பி.எல்., விசாரணைக் கமிஷனின் அறிக்கை (1952-ம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4)-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).